## வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா நிறைவில் – பிரமாண்டமாக அமைந்த

# தந்தை பெரியார் நினைவிடச் சிறப்புக்கெல்லாம் சொந்தக்காரர் முதல்வர்தான்!

## ‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில் அமைச்சர் எ.வ.வேலு பெருமிதம்!

**சென்னை, டிச. 31 –**

**“வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா நிறைவில், பிரம்மாண்டமாக அமைந்த தந்தை பெரியார் நினைவிடத்தின் சிறப்புக்கெல்லாம் சொந்தக்காரர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான்” என்று “கலைஞர் செய்திகள்” தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில் பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியாரின் நூற்றாண்டு நிறைவு விழாவை இரண்டு மாநில அரசுகளின் சமூக நீதியின் அடையாளமாக வைக்கத்தில் தந்தை பெரியாரின் நினைவகம் அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அந்த நினைவகத்தை மிகவும் எழிலுற எழுப்பியிருக்கிறார். முதலில் அந்த நினைவகம் எப்படி இருந்தது? இப்போது எப்படி எல்லாம் அமைக்கப்பட்டிருக்கிறது? முதலமைச்சர் என்ன எல்லாம் சொன்னார்கள் என்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து 17.12.2024 அன்று ‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில் அமைச்சர் எ.வ.வேலு கூறியதாவது: –

**நெறியாளர் சரவணன்:** உங்களைச் சந்தித்ததில் மிக மிக மகிழ்ச்சி. வழக்கமாக ஒரு நினைவிடமோ அல்லது அரசின் அடையாளமாக ஒரு கட்டடம் கட்டுகிறபோது, உங்களை ஒவ்வொரு முறையும் அதே ஆர்வத்தோடும், பெரிய எதிர்பார்ப்போடும்தான் நான் சந்திக்கிறேன். அந்த எதிர்பார்ப்பும், ஆர்வமும் இந்த நினைவகத்தை பார்த்ததற்கு பிறகும் இருந்தது. எனக்கு என்ன கேள்வி என்றால், முதன் முதலில் அந்த நினைவகத்திற்கு நீங்கள் செல்லும் போது, அது எப்படி இருந்தது?

**அமைச்சர் எ.வ.வேலு:** பாழ்பட்டது என்றுகூட சொல்லலாம். எந்த வித நிர்வாகமும் நேரடியாகச் சென்று பார்க்காத அளவில், கேட்பாரற்ற நிலையில், ஏதோ பெரியாரின் நினைவகம் என்ற அடிப்படையில்தான் அந்த நினைவகம் இருந்தது. இன்னும் சொல்லப்போனால், அங்கு இடம்பெற்ற புகைப்படங்கள்கூட செல்லரித்த நிலையில்தான் அந்த நினைவகம் இருந்தது.

**சீர் செய்யாமல் பாழ்பட்ட நிலையில் கட்டிடம்!**

சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், அந்த நினைவகத்திற்குள் செல்வதற்கு முன்னால், “தூசி எல்லாம் மிகவும் அதிகமாக இருக்கிறது. மாஸ்க் போட்டுக் கொள்ளுங்கள் சார்” என்று அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். பெரியாரின் நினைவகத்தை மாஸ்க் போட்டுக்கொண்டு சென்று பார்க்கக் கூடாது. எப்போதுமே பெரியாருக்கு என்று ஒரு தைரியம் இருக்கிறது அல்லவா… எதற்கும் அஞ்சாதவர் அல்லவா அவர். மாஸ்க் போடாமலே உள்ளே சென்று நான் அனைத்தையும் சுற்றிப் பார்த்தேன்.

அது 715 சதுர அடி உள்ள ஒரு கட்டடம்தான். அதுவும் தரைத்தளம் மட்டும்தான். மேல் தளம் கிடையாது. சாதாரணமாக மழை பெய்தால்கூட, சாரல் அடித்தால்கூட உள்ளேதான் தண்ணீர் நிற்கும். அது போன்ற ஒரு பழமையான கட்டடம். பாழடைந்த கட்டடம் என்று சொல்லலாம். அங்கு நிர்வாகம் செய்ய யாருமே இல்லை என்று கூட சொல்லலாம். அந்த அளவிற்கு அந்தக் கட்டடம் நான் முதன் முதலில் பார்க்கும்போது சீர் செய்யப்படாமல் பாழ்பட்டுக் கிடந்தது.

**நெறியாளர்:** இப்போது நீங்கள் சொல்கிறீர்கள்… கிட்டத்தட்ட 700 சதுர அடிதான் அந்த இடமே இருந்தது. அதுவும் பாழடைந்து இருந்தது என்று. வைக்கம் என்றால், பெரியார் போராடினார் என்றுதான் எங்களுக்கெல்லாம் தெரியும். ஆனால், இப்படி ஒரு நினைவகம் அங்கு இருக்கிறது. அதற்கு உயிர் கொடுக்க வேண்டும்; புதுப்பிக்க வேண்டும் எண்ணம் எப்போது வந்தது?

**சட்டப்பேரவையில் முதல்வர் அறிவிப்பு!**

**அமைச்சர் எ.வ.வேலு:** முதலமைச்சர் அவர்கள் 2023 இல் கேரளாவிற்குச் சென்றிருந்தார். கேரளாவின் முதலமைச்சர் அவர்கள் நம்முடைய தமிழ்நாடு ‘திராவிட மாடல்+ ஆட்சி நாயகர் தளபதியாரை ஒரு நிகழ்வின் காரணமாக அழைத்திருந்தார்கள். பெரியார் கேரளாவிற்கு வந்து, அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதை மையமாக வைத்து, ஒரு விழாவை கேரள அரசாங்கம் சார்பில் எடுத்தார்கள். அதற்கு சிறப்பு விருந்தினராக நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களை அழைத்தார்கள். அந்த நிகழ்வில் கலந்து கொள்ள சென்ற முதலமைச்சர், அந்த நிகழ்வில் கலந்து கொண்ட பிறகு, அந்த நினைவகத்தைப் பார்க்கிறபோதுதான், இப்படியா பெரியாருக்கு நினைவகம் என்று, அவர் மனம் மிகவும் பதை பதைத்து விட்டது.

அதனுடைய விளைவுதான், தமிழ்நாடு முதலமைச்சர் திரும்ப வரும்போது சட்டமன்றம் நடந்து கொண்டிருந்தது. எப்போதுமே மார்ச் மாதம்தான் சட்டமன்றத்தில் நிதி நிலை இருக்கும். நிதி நிலை அறிக்கை தொடர்பான விவாதம் சென்று கொண்டிருந்தது. அப்போதுதான் 110 விதியின்கீழ் முதலமைச்சர் அவர்கள்தான் அறிவித்தார்கள்.

இன்றைக்கு, தந்தை பெரியாரின் நினைவு தினம். நான் அதில் சொல்கிறேன், “வைக்கத்திற்கு சென்று போராட்டம் நடத்தி வெற்றி கண்ட தந்தை பெரியார் அவர்களுக்கு அங்கே ஒரு நினைவகம் இருக்கிறது. அந்த நினைவகத்தை புதுப்பிக்கின்ற பணியும், நூலகத்தை புதிதாக கட்டுகின்ற பணியும் தமிழ்நாடு அரசின் சார்பில் மேற்கொள்ள இருக்கிறோம்” என்ற ஒரு அறிவிப்பை அவர் வெளியிட்டார். அதனுடைய விளைவாக, பொதுப் பணித் துறை அமைச்சர் என்ற அடிப்படையில், என்னை அழைத்து, அதைச் சென்று பார்த்து வாருங்கள் என்று சொன்னார். அதன் பிறகு, என்னுடைய துறையின் செயலாளர்களை அழைத்துக் கொண்டு நேரடியாக கேரளாவிற்குச் சென்று, காலையில் இருந்து மாலை வரை ஒரு நாள் முழுவதும் அங்கிருந்து, என்ன செய்யலாம்? ஏது செய்யலாம்? என்ன திட்டமிடலாம்? என்று ஒரு யோசனையோடு, நான் மீண்டும் வந்து முதலமைச்சரிடம் செல்லும்போதே வரைபடத்தோடு செல்ல வேண்டும் என்று முடிவு செய்து, கட்டட வரைபடங்கள் எல்லாம் போடப்பட்டு, முகப்பெல்லாம் போடப்பட்டு, மூன்று வகையான படங்கள் எல்லாம் போட்டு முதலமைச்சரிடம் கொண்டு சென்று காண்பித்தேன்.

**முதல்வர் ஆலோசனை – அறிவுரை!**

அவர், இல்லை… நூலகம் இன்னும் கூடுதலாக போட வேண்டும்; இன்னும் கொஞ்சம் அழகாக இருக்கலாம் என்று அவர்தான் ஆலோசனை வழங்கினார். அதற்குப் பிறகு, அந்த கூடுதலான இடங்களையும், வரைபடங்களையும் சேர்த்து, இரண்டாவது முறையும் கொண்டு சென்று காண்பித்தோம். அதில் ஒரு படத்தைத் தேர்வு செய்தார். நூலகத்திற்கு முகப்பு நன்றாக இருக்கிறது. அதேபோன்று, ஏற்கனவே இருக்கும் நினைவகத்தின் உறுதித் தன்மை நன்றாக இருக்கிறதா? என்று கேட்டார்.

இதில் ஒன்றே ஒன்றை நீங்கள் கவனிக்க வேண்டும். 1985இல் கட்டப்பட்ட கட்டடம் அது. முதலமைச்சர் புதிதாக நூலகம் கட்ட வேண்டும் என்று ஆணையிடுகிறார். நூலகம் சிறப்பாக வர வேண்டும் என்று நினைக்கிறார். ஒரு முறைக்கு




இரண்டு முறை ஆய்வு நடத்தி அந்த வரைபடத்தை ஆய்வு செய்து இதுதான் கட்ட வேண்டும் என்று சொன்ன முதலமைச்சர் – அவர் எங்கு கவனம் செலுத்துகிறார் என்றால், பழைய கட்டடங்கள் ஏதோ வரலாற்றுக்குரிய கட்டடங்களை, திராவிட மாடல் ஆட்சியில் இருக்கிற இடம் தெரியாமல் ஆக்கிவிட்டார்கள் என்று ஒரு குற்றச்சாட்டு வந்து விடுமோ என்று யோசிக்கிறார். அதன் உறுதித் தன்மையைப் பாருங்கள். அது உறுதியாகத்தான் இருக்கிறது என்றதும். “அப்படியென்றால் ஒன்று செய்யுங்கள். அதையே டெவலப் செய்யுங்கள். பழைய கட்டடத்தை மையப்பகுதியாக வைத்துக் கொண்டு, அதையே நீங்கள் டெவலப் செய்யுங்கள். அதை ஒன்றும் டேமேஜ் செய்து, இடித்துவிட வேண்டாம்” என்று ஒரு அறிவுரை சொன்னார்.

அந்த அடிப்படையில்தான், அந்த



700 சதுர அடி என்ற அளவில் கீழே இருக்கும் தரைமட்டம். அந்த 700 சதுர அடியையும் டெவலப் செய்கிறோம். ஏனென்றால், அதைச் சுற்றி வராண்டா பகுதி எல்லாம் கிடையாது. இன்றைக்கு முதலமைச்சர் உரை நிகழ்த்துகிறபோது, ஒரு பிரமாண்டத்தை நான் கண்டேன் என்று சொல்கிறார் பாருங்கள். பெரிய பெரிய தூண்கள். அந்த தூண்கள் எல்லாம் அரண்மனையில் இருப்பதைப் போன்று இருக்கும். அதை விரிவுபடுத்தியதில்தான் அந்த தூண்கள் எல்லாம் வருகிறது. இரண்டு வாசற்படி இருக்கும். இன்றைக்கு இருக்கும் புது கட்டட அமைப்பு கொண்டதாகத்தான் அது இருக்கும். அதற்குப் பின்னால், படி போட்டு, மேலே சென்று, மேலே இருக்கும் தளங்கள் அனைத்தும் புதுமையானது. முகப்பும் பார்த்தால் பெரிய தூணோடு பிரமாண்டமாக இருக்கும். அது முதலமைச்சரின் பெரும் ஆலோசனைதான்.

ஆனால், இப்போது அந்த நினைவகம் என்று எடுத்துக் கொண்டீர்கள் என்றால், ஏறத்தாழ 3,650 சதுர அடி கொண்ட ஒரு நினைவகம் அது. இப்போது கீழ்ப்பகுதியிலும் படக் காட்சி வைத்திருக்கிறோம். மேலேயும் படக் காட்சி வைத்திருக்கிறோம். அதுமட்டுமின்றி, அங்கு ஒரு டி.வி. வைத்திருக்கிறோம். அந்த படக் காட்சியில் என்னென்ன எல்லாம் இருக்கிறதோ, அதன் வரலாறு மற்றும் விடுபட்ட சில காட்சிகள் எல்லாம் அந்த டி.வி.யில் வரும். அந்த டி.வி. எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கும். அது போன்று அமைத்திருக்கிறோம்.

இன்னொரு பகுதி, நூலகம். நூலகத்தைப் பொருத்தவரையில் முழுவதும் புதுமையான கட்டடம். அதில் பழைமையான கட்டிடம் எதுவும் கிடையாது.

**பெரியார் நூலகம் முழுவதும் புதுமையாக கட்டப்பட்டது!**

**நெறியாளர்:** புகைப்படக் காட்சியரங்கம் மட்டும்தான் இருந்ததா? நூலகம் முழுவதும் புதிதாக கட்டப்பட்டது தானா?

**அமைச்சர் எ.வ.வேலு :** புகைப்படக் காட்சியரங்கமும் முழுமையாக இல்லை. இப்போது அந்த கட்டடத்தின் சதுர அடி 3,650. ஏற்கனவே இருந்தது 700 சதுர அடி. ஐந்தில் ஒரு பங்குதான் இருந்தது. அதனால், பெரியார் நூலகத்தை பொருத்தவரையில் முழுமையும் புதுமையானது. அந்த முழுமையும் புதுமையான நூலகத்தில், 5,500 புத்தகங்கள் உள்ளன. ஆங்கில மொழியில் இருக்கும் புத்தகங்களும் இருக்கிறது; மலையாள மொழியில் இருக்கும் புத்தகங்களும் இருக்கிறது; தமிழ் மொழியில் இருக்கும் புத்தகங்களும் இருக்கிறது. அதில் இலக்கியப் புத்தகங்கள், வைக்கம் போராட்டம் பற்றி பல்வேறு எழுத்தாளர்கள் எழுதிய புத்தகங்கள் எல்லாம் அதில் இருக்கிறது. அந்தப் புத்தகங்கள் எப்போதும் பயன்பாட்டிற்குரிய புத்தகங்களாக இருக்க வேண்டும் என்று முதலமைச்சர் கருதுகிறார். இன்றைய இளைஞர்களை ஈர்க்கும் புத்தகங்களாக இருக்க வேண்டும் என்று அவர் நினைக்கிறார். கொள்கை சார்ந்த புத்தகங்களாகவும் இருக்க வேண்டும். அதே நேரத்தில், பயனுள்ள புத்தகங்களாகவும் இருக்க வேண்டும். அதை இரு வகையாக எடுத்துக் கொள்ளலாம். ஐ.ஏ.எஸ். தேர்வுக்கான புத்தகங்களையும் அங்கு படிக்கலாம். அதுபோன்று, தமிழ்நாடு தேர்வாணையம் இருப்பது போன்று, கேரளாவிலும் இருக்கிறது. அதற்கு தயாராகும் புத்தகங்களும் இருக்கிறது.

**நெறியாளர்:** இப்போது நீங்கள் சொன்னீர்கள்… 700 சதுர அடிதான் அந்தப் புகைப்படக் கண்காட்சி இருந்தது. இப்போது அந்தப் புகைப்படக் கண்காட்சி மட்டும் கிட்டத்தட்ட 3,000 சதுர அடிக்கு மேலே என்று சொல்கிறீர்கள். கேரள மாநில அரசு எந்த வகையில் ஒத்துழைத்தார்கள். அவர்களிடம் என்னென்ன கோரிக்கைகளை வைத்திருந்தீர்கள்?

**ஒப்பிட முடியாத அளவில் பணிகள்!**

**அமைச்சர் எ.வ.வேலு :** 70 சென்ட் இடம் கேரளா அரசாங்கம் கொடுத்ததுதான். அப்போதைய மாநில அரசாங்கம் அந்தக் கட்டடத்தை கட்டித் தருவதற்கு ரூ.15 லட்சம் கொடுத்திருக்கிறார்கள். அந்த பழமையான கட்டடத்தை கேரள அரசாங்கம்தான் கட்டினார்கள். தமிழ்நாடு அரசாங்கம் கட்டவில்லை. அதற்கு 15 லட்சம் அரசுப் பணம் செலுத்தி இருக்கிறார்கள். அந்த ரூ.15 லட்சத்தில் 1985இல் அந்த 700 சதுர அடி கொண்ட அந்தக் கட்டடத்தை கட்டி கொடுத்திருக்கிறார்கள். அந்த வகையில் அவர்கள் இடம் கொடுத்திருக்கிறார்கள். 15 லட்சம் பெற்றுக் கொண்டு அந்தக் கட்டடத்தை கட்டி இருக்கிறார்கள். சுற்றுச் சுவரும் கட்டி இருக்கிறார்கள். இது கேரள அரசாங்கத்தின் பணிகள்.

அங்கு மிகவும் சொற்பமான படங்கள்தான் இருந்தன. 700 சதுர அடியில் எத்தனை படங்கள் வைத்திட முடியும். அதனால் குறிப்பிட்ட படங்கள்தான் அங்கு வைத்திருந்தார்கள். இப்போது விரிந்து பறந்து அழகாக … நீங்களே பார்த்தீர்கள் இல்லையா… இப்போது இருப்பதையும், அப்போது இருந்ததையும் ஒப்பிட முடியாத அளவிற்கு ஆகிவிட்டது.

**ஆசிரியரின் வாழ்த்து – பாராட்டு!**

அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நம்முடைய ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் அந்த நிகழ்ச்சிக்குச் சென்ற மறுநாள் எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார். அவர் பெரும்பான்மையான நேரத்தில் பெரியாரோடு இருந்தவர். அவர் எழுதியிருந்தார், முதலமைச்சருக்கு மிகவும் நன்றி சொல்லிவிட்டு, 100 ஆண்டு நிகழ்வுகளை என் கண் முன்னே நிறுத்துகிற படக் காட்சியாக அது அமைந்திருக்கிறது. அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த உங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள், நன்றி, பாராட்டு… என்று ஒரு கடிதம் எழுதி இருந்தார்.

**நெறியாளர்:** அவர்களுடைய கடிதம் என்றதும் எனக்கு ஒரு கேள்வி இயல்பாக வருகிறது. தமிழ்நாட்டின் எல்லைக்குள் கலைஞர் உலகத்தை கொண்டு வந்து விட்டீர்கள்; கலைஞரின் நூலகம் இருக்கிறது; ஏறுதழுவுதல் அரங்கம் இருக்கிறது; மருத்துவமனை இருக்கிறது; இப்போது தமிழ்நாட்டில் எல்லைக்கு வெளியே சென்று இப்படி ஒரு கட்டடத்தை கட்ட போகிறோம் என்கிறபோது அந்த இடத்திலும், உங்களுடைய கடமை உணர்ச்சி என்பதை நாங்கள் பல்வேறு இடங்களில் பார்த்திருக்கிறோம். ஆனால் கடமை உணர்ச்சியைத் தாண்டி, ஒரு பொறுப்புணர்ச்சி இருந்ததை நீங்கள் உணர்ந்தீர்களா?

**பெரியார் மீது மிகப்பெரிய ஈடுபாடு!**

**அமைச்சர் எ.வ.வேலு:** அமைச்சர் என்பது கடமை உணர்ச்சி. ஒரு முதலமைச்சர் ஆணையிடுகிறார். அது எந்தத் துறையாக இருந்தாலும், அந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் முதலமைச்சர் சொல்கிற ஆணையை நிறைவேற்றுவது ஒரு அமைச்சரின் கடமை. முதலமைச்சரை பொருத்தவரையில், அந்தக் கடமை என்பது எனக்கு கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். அது அழகுற அமைய வேண்டும். முதலமைச்சர் இப்படித்தான் எண்ணுவார்.

முதலமைச்சர் இத்தகைய எண்ணங்களோடுதான் படுத்து உறங்கிக் கொண்டிருப்பார். அவ்வாறு எனக்குத் தோன்றுவதற்கு என்ன காரணம் என்றால், நானே ஒரு பகுத்தறிவாளன்.

அதை சொல்ல வேண்டும் என்றால், எனக்கு 13 வயது. திருவண்ணாமலையில் மண்டித் தெரு என்கிற இடத்தில் தந்தை பெரியார் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார். அதிலிருந்து 9 கிலோமீட்டர் என்னுடைய கிராமம், சிற்றூர். என்னுடைய தாய்மாமன் கிராமத்தில் இருந்து புல்லட் மோட்டார் பைக்கில், “பெரியார் பேச்சை கேளு வா” என்று என்னை அழைத்து வந்தார். அதிலிருந்து எனக்கு பெரியார் மீது ஒரு அளப்பரிய ஈடுபாடு. அவர்தான் தமிழ்நாட்டுக்கு பெரிய வழிகாட்டி என்ற உணர்வு எனக்கு மேலோங்கி இருந்த காலகட்டங்கள்.

அதற்குப் பிறகு, ஏறத்தாழ 26 ஆண்டு காலம் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த கலைஞரோடு நெருக்கமாக பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

எவ்வளவுதான் பாராட்டுக்குரிய கட்டடம் இருந்திருந்தாலும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எனக்கு வாழ்க்கையில் கொடுத்த 2 பெரும் வாய்ப்பு – பெரும் வாய்ப்பு என்பதை விட மன நிறைவு என்று கூட சொல்லலாம்.

**கலைஞர் வீட்டு கட்டுத்தறிகள்!**

ஒன்று,கலைஞர் நினைவகத்தை உலகமே வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிற ஒரு நினைவகம் அது. அதைக் கட்டுகிற வாய்ப்பை எனக்கு முதல்வர் தந்தது எனது வாழ்க்கையில் என்றைக்கும் மறக்க முடியாத ஒன்று. மறக்க முடியாதது என்றால், எனது நினைவு போனால்தானே நான் மறக்க முடியும். அதனால், நினைவில் இருக்கக்கூடியது. அது நினைவில் இருந்து கொண்டே இருக்கும்.

இன்னொன்று, இப்போது இருக்கும் பெரியார் நினைவகம். அதில் என்ன சிறப்பு? இன்னொரு மாநிலத்திற்கு என்னை அனுப்பி, பெரியாரின் நினைவகத்தை கட்டுங்கள் என்று அவர் பணிக்கிறார். அந்த 13 வயதிலிருந்து ஒரு கொள்கையோடு ஒட்டி இருக்கிற ஒரு உணர்வு. அந்த வாய்ப்பை நமக்கு கொடுத்திருக்கிறார். இதைவிட என்ன வேண்டும் வாழ்க்கையில். இந்த இரண்டு கட்டடம் கட்டியதிலேயே என்னுடைய வாழ்க்கை நிறைவடைந்துவிட்டது என்று சொல்லலாம்.

எப்போது பார்த்தாலும், தலைவர் கலைஞர் தனிமையில் இருக்கிறார். டிஸ்கஷன் செய்கிறார். அதை தாண்டி செய்கிறார் என்றால், அவருடைய கருத்தாக இருக்கட்டும்; அவருடைய சிந்தனையாக இருக்கட்டும்; அவர் பேசுவதை பார்த்தீர்கள் என்றால். பெரியாரையும் அண்ணாவையும் சொல்லாத நாளே இல்லை. தினமும் எப்படியாவது சொல்லிக் கொண்டிருப்பார் பெரியாரைப் பற்றி சொல்வார் அல்லது அண்ணாவைப் பற்றி சொல்வார். இரண்டும் இல்லாமல் அவர் பேசியது போன்று எனக்கு ஒரு நினைவே இல்லை. அவரோடு நாங்கள் இருப்பதனால், எங்களுக்கு எப்படி இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். பொதுவாக சொல்வார்கள், ‘கம்பன் வீட்டு கட்டுத் தறியும் கவிபாடும்’ என்று ஒரு முதுமொழி உண்டு. நாங்கள் எல்லாம் கலைஞர் வீட்டு கட்டுத்தறி. அதனால், பெரியார் மீது அளப்பரிய ஈடுபாடு இருப்பதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. அதற்கும் காரணம், அண்ணன் கலைஞர்தான். அந்த உணர்வு எனக்கு அதிகமாக இருந்ததால், அதன் மீது ஈடுபாடும் அதிகமாகவே இருந்தது. பார்த்து… பார்த்து… அப்படி செய்ய வேண்டும்! இப்படி செய்ய வேண்டும்!

தொடர்ச்சி 13ஆம் பக்கம்